

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | பிப்ரவரி 09, 2017 | புரட்சி 16 | முழக்கம் 04 | விலை: ரூ.3.00

## இனி 'ஆசீர்வாதம்' அஞ்சல் வழியாக...

*திருமணமான புதுத் தம்பதிகள் - இனிமேல், ஆசீர்வாதம் வாங்குவதற்கு திருப்பதிக்கு நேரடியாக வர வேண்டாம்; திருமணப் பத்திரிகையை தபாலில் அனுப்பினாலே போதும்; அதில் மஞ்சள், குங்குமம் வைத்து, வேதம் ஓதி, பகவான் ஆசீர்வாதத்தையும் தபால் உறைக் குள்ளேயே போட்டு அஞ்சலில் அனுப்பி வைப்பார்களாம். திருப்பதி தேவஸ்தானம் அறிவித்திருக்கிறது.*

கடவுள்கள் எல்லாம் காலத்துக் கேற்பவே மாறி விட்டார்கள். அஞ்சல கங்கள், ஸ்வைப் எந்திரங்கள், 'சிசி டிவி' காமிராக்கள் என்று நவீன வாழ்க்கைக்குப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

"ஆசீர்வாதத்தைத் தபாலில் அனுப்பு வதற்கு பதிலாக ஆண்டவனே நேரடியாக புறப்பட்டு வந்து பக்தர்களை சந்திக்க லாமே" என்று ஒருவர் கேட்டார்; நியாயமான கேள்விதான்.

உண்மையிலேயே கடவுளின் உணர்ச்சி களை பக்தர்களோ, அர்ச்சகர்களோ மதிப்பதாகத் தெரியவில்லை. "பகவானே இப்படி ஒரே இடத்தில் அசையாமல் இருப்பதை தாங்கள் விரும்புகிறீர்களா?" என்று கேட்டால், கடவுள் என்ன கூறுவார்?

"போதுமடா சாமி; இனியும், இந்த கர்ப்பகிரக இருட்டறையில் முடங்கிக் கிடக்கத் தயாராக இல்லை. எவ்வளவு காலம்தான் இந்த சட்டை போடாத உம்மணாமூஞ்சி களையும், அவர்களது தவளை சத்தங்களை யும் கேட்டுக் கொண்டே இருப்பது? போதும் போதும்; நாங்கள் வெளியே கிளம்புகிறோம். பக்தர்களை நேரடியாகவே சந்திக்கப் போகிறோம். தேவைப்பட்டால் 'வாட்ஸ் அப்', 'யூ டியூப்'களையும் பயன்படுத்தத் தயாராகி விட்டோம்" என்று குமுறத் தான் செய்வார்கள்.

"என்ன சாமி, அஞ்சல் எல்லாம் அனுப்ப வேண்டாம்; ஆசிர்வதிக்க நானே கிளம்பப் போகிறேன் என்று கடவுள் கிளம்பி விட்டால் என்ன செய்வீர்கள்?" என்று, அர்ச்சகரிடம் ஒரு நண்பர் கேட்டார். அவ்வளவுதான். நெருப்பில் விழுந்த புழுபோல் குதிக்கத் தொடங்கிவிட்டார்.

"என்ன கிண்டலா? அதெப்படி கடவுள் பேசுவார்? இந்த கர்ப்பகிரகத்தை விட்டு ஒரு அடி எடுத்து வைக்கக்கூட எந்தக் கடவுளுக் கும் உரிமை கிடையாது. எங்கள் மந்திர சக்தியை நிறுத்திவிட்டால் கடவுளுக்கே சக்தி கிடையாது. கடவுளுக்கு சக்தி வந்து விட்டது; கடவுள் பேசுகிறார்; கடவுள் ஊர் சுற்றக் கிளம்பி விட்டார்; பக்தர்களை நேரடியாக சந்திக்கப் போகிறார் என்றெல்லாம் பேசுவது தெய்வ நிந்தனை. அதுவும் கடவுளுக்கு சக்தி இருக்கிறது என்று கூறுவது எவ்வளவு பெரிய தெய்வக் குற்றம் தெரியுமா? இந்தப் பாவம் உங்களை சும்மா விடாது. இந்தக் கோயிலை விட்டு கடவுளை வெளியே அனுப்பி விட்டால், பிறகு நாங்கள் பேன் குத்திக் கொண்டா உட்கார்ந்திருக்க முடியும்? இப்படி எல்லாம் பக்தர்களை புண்படுத்தாதீர்கள்" என்று புலம்பி தீர்த்து விட்டார்.

"சாமி, பதட்டப்படாதீங்க. நீங்கள் அனுமதிக்க மறுத்து விட்டால் என்ன? நான் ஏழுமலையானுக்கு நேரே கடிதம் எழுதி 'பகவானே வெளியே வந்து விடு' என்று அஞ்சலில் அனுப்பி விடுகிறேன்" என்றார் நண்பர். ஏழுமலையான் கடுதாசிகளை எல்லாம் படிப்பானா? என்று நக்கலடித்தார் அர்ச்சகர்.

ஆசீர்வாதத்துக்கு கடிதத்தைப் பயன் படுத்தும் ஏழுமலையான், ஏன் கடிதத்தைப் படிக்க மாட்டானோ என்று திருப்பிக் கேட்டார் நண்பர். அர்ச்சகர் 'கப்சிப்'.

– கோடங்குடி மாரிமுத்து

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேட்டி

# தமிழக அரசை ஆட்டிப் படைக்கும் பா.ஜ.க.வின் சூழ்ச்சி

தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்க முடியாது என்பதால், பா.ஜ.க. தமிழக அரசை மிரட்டிப் பணிய வைக்க திட்டமிடுகிறது என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூறினார். 'ஒன் இந்தியா' இணையதள இதழுக்கு கொளத்தூர் மணி அளித்த பேட்டி:

**கேள்வி :** ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின்போது தேசியக் கொடி அவமதித்த தேசத் துரோகிகள் என்று நிர்மலா சீதாராமன் பேசி வருகிறார். தேசியக் கொடி எதிர்ப்பு போராட்டம் நடந்த மண் இது. இது குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் ?

**கொளத்தூர் மணி பதில் :** மத்திய அரசு தனிச்சட்டம் இயற்றுவதற்கான முன்முயற்சிகளில் உதவுவது என்பதின் மூலம் ஜல்லிக்கட்டுப் போராட்டத்தை தங்களது போராட்டமாக காண்பிக்க முயற்சி மேற்கொண்டதன் அடையாளமாகத்தான் விவேகானந்தர் இல்லம் அருகில் போராட்டம் நடத்த மாணவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதனால்தான் விவேகானந்தர் படத்தை வைத்துக் கொண்டு போராட்டம் தொடங்கப்பட்டது. ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் ஒரு குறிப்பிட்ட படத்திற்கு என்ன வேலை என்று கேட்கிறார்கள். அப்படி என்றால் விவேகானந்தருக்கும் ஜல்லிக்கட்டுக்கும் என்ன சம்பந்தம்? அதுபற்றி ஏன் இதுவரை யாரும் பேசவில்லை?

ஜல்லிக்கட்டுக்கான போராட்டம் தொடங்கிவிட்ட நிலையில், நாளாக நாளாக தமிழ்நாட்டின் இயல்பான நிலை போராட்டத்தில் வெளிப்பட்டுவிட்டது. ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகவும் பீட்டாவை தடை செய்ய வேண்டும் என்பன போன்ற முழக்கங்கள் மட்டுமே தொடக்கத்தில் அனுமதிக்கப்பட்டன. அதற்கு மேல் எந்த முழக்கங்களும் வராமல் பார்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், போராட்டத்தின் தன்மை தமிழ்நாட்டு தன்மைகேற்ப பின்னர் மாறிவிட்டது. இந்தப் போராட்டத்தில் தேசியக் கொடி எங்கும் எரிக்கப்பட்டதாக நான் கேள்விப் படவில்லை. அவமதிக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். எரித்திருந்தால் கூட தமிழ்நாட்டிற்கு அது புதிய விஷயமல்ல.

மோடி யோகாசனம் செய்யும் போது தேசியக் கொடியை கழுத்தில் போட்டுக் கொண்டும் முகத்தை துடைப்பதையும் விட மோசமாக ஜல்லிக்கட்டு போராட்டத்தின் போது அவமதிக்கப்படவில்லை என்று நான் கருதுகிறேன். அப்படியே நடந்திருந்தாலும் தமிழ்நாட்டில் இது இயல்பானதாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பெரியார் காலத்தில் தமிழ்நாட்டில் தேசியக் கொடி எரிக்கும் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் கூட தமிழ் தேசிய விடுதலை இயக்கமும், தமிழ் தேசிய பேரியக்கமும் தேசியக் கொடியை எரித்து சிறைக்கு சென்றுள்ளனர். ஆனால், ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் இதுபோன்று எதுவும் நிகழவில்லை.

ஏதோ சாதாரணமாக போராட்டம் நடந்து முடிந்துவிடும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில், மத்திய அரசுக்கு எதிரான போராட்டமாக ஜல்லிக்கட்டுப் போராட்டம் மாறியதை பாஜகவினரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் பின்லேடன் படத்தை வைத்துக் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்று ஒரு பொறுப்புமிக்க முதல்வர் சொல்கிறார். இதே செய்தி பத்திரிகையொன்றில், உளவுத் துறை அறிக்கை என்று வெளியிடப்பட்டிருந்தது. அதை அப்படியே சட்டமன்றத்தில் முதல்வர் படிக்கிறார். ஒரு முதல்வர் என்றால் அதனை ஒப்பிட்டு ஆய்வு செய்து பின்னர் சொல்லி இருக்க வேண்டாமா ?

போராட்டத்தில் பின்லேடன் படம் வைத்திருப்பதாக சொல்வது போராட்டத்தை கொச்சைப்படுத்துவதற்கான விஷயமாக பார்க்க வேண்டி இருக்கிறது. போராட்டம் அவர்கள் கையில் இருந்து போன பிறகு அதற்கு இஸ்லாம் சாயத்தை பூச பாஜக முயற்சி மேற்கொள்கிறது.

போராட்டத்தில் இஸ்லாமியர்கள் வந்தார்கள்; உணவு கொடுத்தார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. முஸ்லிம்கள் உணவு கொடுப்பதெல்லாம் ஒன்றும் புதிய செய்தியல்ல. சென்னை வெள்ளத்தில் மூழ்கி இருந்த போதும், வர்தா புயல் தாக்கிய போதும் முஸ்லிம்கள் உணவு வழங்கினார்கள். அவர்கள் தொடர்ந்து மக்கள் நலப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் இயல்பாக தமிழர்களாக இருக்கிறார்கள். அவர்களை முஸ்லிம்களாக பிரித்து ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் அவர்களுக்கு என்ன வேலை என்று பாஜகவினர் கேட்கிறார்கள். பொங்கல் என்பது தமிழர் திருவிழாவே தவிர, அது இந்துக்கள் திருவிழா அல்ல.

வட இந்தியாவில் செய்யும் தந்திரங்களை இங்கும் செய்ய பாஜக முயற்சி செய்து வருகிறது. தமிழ் நாட்டில் பிறந்தாலும் வட இந்தியாவிலேயே வசிக்கும் நிர்மலா சீதாராமனுக்கு இது எல்லாம் தேச விரோத செயலாகத்தான் தெரியும்.

**கேள்வி:** தேசியக் கொடியை அவமதிப்பது என்பதே தேச துரோக குற்றமா ?

**பதில் :** எந்த நோக்கத்தில் செய்யப்படுகிறது என்பது தான் முக்கியம். போராட்டக்காரர்கள் உண்மையில் தேசியக் கொடியை அவமதிக்கவில்லை. பாஜகவினர் இட்டுக்கட்டி அப்படி சொல்கிறார்கள். அப்படியே எரித்திருந்தால் கூட தேசத்தை அவமதிப்பது அல்ல. எங்களுடைய பாரம்பரிய விளையாட்டை அனுமதிக்காத இந்தியா எங்களுக்கு வேண்டுமா என்பதின் குறியீடாக நாம் எடுத்துக் கொள்ளலாம். போராட்டக்காரர்களுக்கு எழுந்த கோபம் நீண்ட காலமாக தேக்கி வைக்கப்பட்ட கோபம். நதிநீர் உரிமைகள், இந்தியிலும், ஆங்கிலத்திலும் எழுதக் கூடிய பொது நுழைவுத் தேர்வு உள்ளிட்டவைகளில் மத்திய அரசின் செயல்பாடுகள் மீது இளைஞர்களுக்கு இயல்பாகவே கோபம் இருக்கிறது. இதுஎல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாக வெளிப்பட்டிருக்கிறது என்றுதான் பார்க்க வேண்டும்.

**கேள்வி :** பிரதமர் விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட வரா ? அவரை விமர்சித்தாலே தேச விரோத குற்றமா ?

**பதில் :** முன்னாள் பிரதமர் நேருவை விமர்சித்தபோது, நகைச்சுவையோடு அதனை அவர் ஏற்றுக் கொண்டதை எல்லாம் இந்திய வரலாறு நமக்கு சொல்கிறது. மோடி என்றால் எதிர்த்தே பேசக் கூடாது என்று ஒரு பிம்பத்தை பாஜகவினர் கட்டி எழுப்பி வைத்துள்ளார்கள். அவரை ஒரு புனிதர் போன்று காட்ட முயற்சி செய்கிறார்கள். இவர்களின் புனிதத்தை எல்லாம் மேகாலயாவில் சண்முகநாதன் காண்பித்துவிட்டார்.

மேலும், 5 வட மாநிலங்களில் தேர்தல் வர உள்ள நிலையில், மோடிக்கு எதிராக போராட்டம் நடப்பதை பாஜகவினரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. வட இந்திய மீடியாக்கள் எல்லாம் மோடியை பாடையில் வைத்து எடுத்து செல்வது போன்ற காட்சிகளை அடிக்கடி ஒளிபரப்பியுள்ளன. இதன் மூலம் மோடியின் மீது செயற்கையாக கட்டி எழுப்பப்பட்ட பிம்பம் குலைந்துவிடும் என்ற அச்சம் பாஜகவினருக்கு ஏற்பட்டது. அதுதான் இதுபோன்ற கலவரத்திற்கு காரணமாகவும் இருக்கிறது.

**கேள்வி :** ஆர்.எஸ்.எஸ் தமிழகத்தில் நிலை கொள்வதற்கு தமிழக அரசை பாஜக பயன்படுத்திக் கொள்கிறதா ?

**பதில் :** ஆமாம். தேர்தலின் நின்று ஆட்சியை பிடிக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட பாஜகவினர், இப்போது தமிழகத்தில் உள்ள நெருக்கடியான சூழலை தங்களுக்கு சார்பாக மாற்றிக் கொள்ள முயற்சி செய்து வருவதாக நான் பார்க்கிறேன். அதற்கு இணங்கிப் போனவராகத்தான் முதல்வரையும் நான் பார்க்கிறேன்.

**கேள்வி:** இதுகுறித்து, நீங்கள் என்ன செய்ய திட்டம் வைத்திருக்கின்றீர்கள் ?

**பதில் :** எல்லாக் கட்சியினரும் சேர்ந்து கட்சி அடையாளம் இல்லாமல் ஒன்று திரண்டு, ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டம் நடத்தியவர்கள் மீது தமிழக காவல் துறையினரின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையை கண்டித்துப் போராட்டம் நடத்தவும், முதல்வரை சந்தித்து மனு கொடுக்கவும் முடிவு செய்துள்ளோம். மோடியை அம்பலப் படுத்துபவர்கள் எல்லோரும் சமூக விரோதிகள் என்று முத்திரை குத்த பாஜக முயற்சி மேற்கொண்டு வருகிறது. அவர்களை எதிர்த்தால் தேச விரோதிகள், ஆதரித்தால் தேச பக்தர்கள். மாட்டுக்கறி சாப்பிட்டால் தேச விரோதி என்று சொல்வார்களே அப்படித்தான் இதுவும். அவர்களின் செயல் திட்டத்திற்கு எதிராக எது இருந்தாலும், அது தேச விரோதம். பாஜகவின் செயல்கள், திட்டங்கள் குறித்து தொடர்ந்து மக்கள் மத்தியில் பேசுவோம். எடுத்துரைப்போம்.

– 'ஒன் இந்தியா தமிழ்' இதழுக்கு அளித்துள்ள பேட்டி. 31.01.2017

**தலையங்கம்**

# ‘டிரம்ப்’பின் இந்துத்துவம்

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், தேர்தல் பரப்புரையின் போது ‘இந்துத்துவா’ கொள்கை தனக்கு பிடிக்கும் என்றார். தமிழ்நாட்டில் மதவாத பார்ப்பன சக்திகளும், அமெரிக்கா வாழ் ‘இந்துத்துவ’ சக்திகளும் தங்களின் மதவாத கொள்கைக்கு அமெரிக்காவின் ஆதரவு கிடைத்துவிட்டதில் ஆனந்தக் கூத்தாடின. எதிர்பார்த்ததுப் போலவே பதவிக்கு வந்தவுடன் தனது இஸ்லாமிய வெறுப்பு நஞ்சை கக்கத் தொடங்கிவிட்டார். இராக், சிரியா, லிபியா, ஏமன், சூடான் மற்றும் ஈரான் நாடுகளைச் சேர்ந்த (இஸ்லாமிய) அகதிகள், அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதித்தார். இந்த ‘மதவெறி’ ‘வகுப்புவாத’ செயல்பாட்டுக்கு அமெரிக்காவின் பெண் அரசு வழக்கறிஞர் சாலியேட்ஸ் எதிர்ப்பு தெரிவித்து, “இது சட்டப்பூர்வமான ஆணையல்ல” என்று துணிவுடன் கூறினார். இந்தியாவில் கொழுத்த ஊதியத்தில் உச்சநீதி மன்றத்தில் வாதாடும் நமது அரசு வழக்கறிஞர்களிடம் (பெரும் பாலும் பார்ப்பனர்கள்தான்) இப்படி நெஞ்சுரத்துடன் அரசை எதிர்க்கும் நேர்மையை கனவில்கூட கற்பனை செய்ய முடியாது.

அதேபோல் குடியேற்றத் துறை இயக்குனர் டேனியல் ராக்ஸ்டேல் என்பவரும் எதிர்ப்பை துணிவுடன் வெளிப் படுத்தினார். இருவரையும் பணி நீக்கம் செய்தார் டிரம்ப். இப்போது அமெரிக்க நீதிமன்றமே, டிரம்பின் ஆணையை நிறுத்தி வைத்து விட்டது. டிரம்ப் முகத்தில் கரி பூசப்பட்டிருக்கிறது. இந்தத் தடை ஆணையைக் கூட டிரம்ப் நேர்மையுடன் செயல்படுத்தவில்லை. அவர் தடை செய்துள்ள ஏழு இஸ்லாமிய நாடுகளின் பட்டியலில் அய்ந்து நாடுகள் அமெரிக்காவின் கொடூரமான இராணுவத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட நாடுகள்.

அதே நேரத்தில் 2001 செப்டம்பரில் அமெரிக்கா மீது பயங்கரவாத தாக்குதல் நடத்திய சவூதி அரேபியா, எகிப்து, அய்க்கிய அரபு அமீரகம், லெபனான் நாடுகளைச் சார்ந்தவர்கள் ‘டிரம்ப்’ விதித்த தடைப்பட்டியலில் இடம் பெறவில்லை. இந்த நாடுகளின் ஆட்சியாளர்கள் அமெரிக்காவின் ஆதரவாளர்கள். டிரம்ப் தடை செய்த நாடுகளில் அகதிகளாகி, அமெரிக்காவுக்குள் வரவிரும்புவோர், அமெரிக்காவின் நேசத்துக்குரிய அரபு சர்வாதிகாரிகளின் அடக்குமுறைகளை எதிர்ப்பவர்கள். இப்படி நுழைவதற்கு தடை விதிக்கப்பட்ட நாடுகளைச் சார்ந்த ஏற்கனவே அமெரிக்காவில் குடிபுகுந்தவர்கள் மீதும் டிரம்ப் நிர்வாகம் கடும் அடக்குமுறைகளை எந்த நேரத்திலும் ஏவிவிடும்; அல்லது வெளியேற்றும்.

டிரம்ப்பின் இந்தத் தடை உத்தரவு நாடுகளுக்கு எதிரானது என்பதைவிட வறுமையின் கோரப் பிடிகளில் தவிக்கும் அப்பாவி முஸ்லிம்களுக்கு எதிரானது என்று சர்வதேச அரசியல் பார்வையாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். இந்தியாவுக்குள்ளே வாழும் ஏழை எளிய இஸ்லாமியர்களை குறி வைத்து தாக்கும் ‘இந்துத்துவ’ வெறியைத்தான் டிரம்ப்பும் செயல்படுத்துகிறார். அதுமட்டுமல்ல வேலை வாய்ப்புகளிலும் ‘டிரம்ப்’ கை வைத்துவிட்டார்.

இந்தியாவில் மக்கள் வரிப் பணத்தில் அய்.அய்.டி. போன்ற உயர்கல்வியைப் படித்த பார்ப்பனர்கள் அமெரிக்காவுக்கும் அய்ரோப்பாவுக்கும் பறந்து விடுகிறார்கள். அமெரிக்க குடியுரிமையைப் பெறுவதில் மிகவும் தீவிரம் காட்டுகிறார்கள். ‘பாரத தேசம்’ – ‘இந்து கலாச்சார பூமி’ என்றெல்லாம் இங்கே பகட்டுப் பேசும் ‘பார்ப்பன சுதேசிகளும்’ இந்துத்துவ ஆதரவாளர் களும் இப்படி ‘இந்தியர்கள்’ அமெரிக்கக் குடிமக்கள் ஆவதை ஒருபோதும் எதிர்ப்பதில்லை. அங்கிருந்து கோடிக் கணக்கில் டாலராக அனுப்பி வைக்கும் ‘தொகை’யை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறார்கள். ‘டிரம்ப்’ தங்கள் மதவாதத்துக்கு துணை நிற்பார் என்று நம்பிய பார்ப்பனர்களுக்கு இப்போது ஒரு அதிர்ச்சியடி விழுந்திருக்கிறது. அமெரிக்காவில் ஆண்டுக்கு 1 இலட்சத்து 30 ஆயிரம் டாலர் ஊதியமாக பெறுவோர் மட்டுமே இனி அமெரிக்க நிறுவனங்களில் பணியாற்ற முடியும் என்ற மசோதா, நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.

அமெரிக்காவுக்கு வேலை வாய்ப்புகளுக்காக செல்லும் இளைஞர்களுக்கு வழங்கப்படும் விசாவுக்கு ‘எச்பி’ என்று பெயர். தற்போது இந்த ‘விசா’ வைத்திருப்பவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் 60,000 டாலராக உள்ளது. இது இரட்டிப்பாக உயர்த்தப்படும்போது, இவ்வளவு கூடுதல் ஊதியத்தை வழங்க அங்கே உள்ள நிறுவனங்கள் முன் வராது. இந்தியாவிலிருந்து இவ்வளவு தொகையை ஊதியமாகத் தந்து, பணி வாய்ப்புகளுக்கு அமெரிக்க நிறுவனங்கள் அழைக்கும் நிலையும் தடைப்பட்டு விடும். அமெரிக்கர்கள் மட்டுமே இனி அங்கே வேலை செய்ய வேண்டும் என்பதே இந்த மசோதாவின் உள்நோக்கம். இந்த மசோதா சட்டமாவதை தடுத்து நிறுத்த டிரம்புக்கு தேர்தலில் தீவிர ஆதரவும் நன்கொடையும் வழங்கிய பார்ப்பனர்கள், டிரம்பிடம் தங்களது செல்வாக்கைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

‘உலகமயமாக்கல்’ என்ற கொள்கைக்கு நியாயம் கற்பித்தவர்கள், வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகள் கிடைப்பதையே சுட்டிக் காட்டி வந்தார்கள். எந்த நேரத்திலும் அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்ற ஆபத்துகளை உணர மறுத்தார்கள். இப்போது அமெரிக்கா உள்ளிட்ட ‘உலகமயமாக்கல்’ கொள்கையை ஆதரித்த நாடுகள் தங்கள் நாட்டு வேலை வாய்ப்புகளை சொந்த மக்களுக்கே வழங்கி பாதுகாத்துக் கொள்ளும் (Protectionism) கொள்கைக்கு வந்து விட்டன. இப்போது டிரம்ப் இந்தக் கொள்கையோடு ‘இந்துத்துவா’வையும் சேர்த்துக் கொண்டு விட்டார்.

பார்ப்பனியம் தங்களின் மேலாண்மைக்குப் பயன்படுத்தி வரும் உலகமயமாக்கல் – இந்துத்துவம் என்ற இரண்டு கொள்கைகளுமே மக்கள் விரோதமானவை என்பதை இப்போதாவது புரிந்து கொள்ள வேண்டும்.

# நான் ஒரு ‘தேசத் துரோகி’

நான் ஒரு தேசாபிமானியல்லன். அது மாத்திரமல்ல; தேசாபிமானத்தைப் புரட்டு என்றும், அது தனிப்பட்டவர்களின் வயிற்றுச் சோற்று வியாபாரம் என்று சொல்லியும், எழுதியும் வரும் தேசத் துரோகியாவேன். ஒரு காலத்தில் தேசாபிமானத்துக்காகச் சிறை செல்லும்படியான அவ்வளவு தேசாபி மானியாய் இருந்து, பல முறை சிறை சென்று வந்துதான் அதன் அனுபவத்தைச் சொல்லு கிறேனே ஒழிய, வெளியில் இருந்து வேடிக்கை மாத்திரம் பார்த்துவிட்டு நான் இப்படிச் சொல்ல வரவில்லை.

இதனால் பாமர மக்கள் தூஷணைக்கும், பழிப்புக்கும்கூட ஆளாகியிருக்கிறேன் என்றாலும் எனது உறுதியான எண்ணத்தை நான் மாற்றிக் கொள்ள முடியவில்லை.

‘நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும், தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலை போகாது’ என்பதுதான் தேசாபிமானிகளின், மகாத்மாக் களின் சுயராஜ்ய தர்மமாகும். இந்த சுயராஜ்யம் வருவதைவிட இப்போது இருக்கும் பரராஜ்யமே மேலானது என்பது எனது கருத்து.

இன்றைய பரராஜ்யத்தில் தோட்டி சுமக்கும் வேலையை விட்டு மந்திரி வேலை செய்தாலும் செய்யக் கூடும்.

ஆனால், அவனவன் சாதித் தொழிலையும் பரம்பரைப் பெருமையையும் பழக்க வழக்கங் களையும் காப்பாற்றும் காங்கிரஸ் சுயராஜ் யத்தில் தோட்டி புல் சுமப்பதைவிட வேறு தொழில் ஏற்பட முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். இந்தக் காரணத்தினால் தான் நான் தேசத் துரோகியாக இருக்கிறேன். சுய ராஜ்யத்துக்கும் விரோதியாக இருக்கிறேன். ஆனால், பார்ப்பனர் சாதியையும் பற சாதியை யும் அழித்து, எல்லோரும் சரிசமமான மனிதர்கள் என்று ஆக்கும் தேசாபிமானத் திற்கும் சுயராஜ்யத்துக்கும் நான் விரோதி யல்லன்; துரோகியுமல்லன் என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

நான் இந்திய சுயராஜ்யம், இந்திய தேசாபிமானம் என்பதைப் பற்றி மாத்திரம் பேசுவதாக நினைத்து விடாதீர்கள். உலகத்தில் உள்ள எல்லா தேசங்களின் தேசாபிமானங்களையும் சுயராஜ்யங்களையும் கண்டும் தெரிந்தும்தான் பேசுகிறேனே ஒழிய, கிணற்றுத் தவளையாய் இருந்தோ வயிற்றுச் சோற்றுச் சுயநல தேசபக்தனாக இருந்தோ நான் பேச வரவில்லை.

எந்தத் தேசத்திலும் எப்படிப்பட்ட சுயராஜ்யத்திலும் குடிஅரசு நாட்டிலும் ஏழை - பணக்காரன், முதலாளி - தொழிலாளி வித்தியாசம் இருந்துதான் வருகின்றது. நம் நாட்டில் இவைகள் மாத்திரம் அல்லாமல் பார்ப்பான், பறையன், மேல்சாதி, கீழ்சாதி ஆகிய அர்த்தமற்ற அயோக்கியத்தனமான வித்தியாசங்களும் அதிகப்படியாக இருந்து வருகின்றன. இவைகளை ஒழிக்கவோ அழிக்கவோ இன்றைய தேசாபிமானத்திலும் சுயராஜ்யத்திலும் கடுகளவாவது யோக்கியமான திட்டங்கள் இருக்கின்றனவா என்று உங்களைக் கேட்கிறேன்.

இப்படிப்பட்ட தேசாபிமானம், சுயராஜ்யா பிமானம் என்கின்ற சூழ்ச்சிகளையும், தந்திரங் களையும் விட்டுவிட்டு மனித ஜீவ அபிமானம் என்கின்ற தலைப்பின் கீழும் கொள்கையின் கீழும் எல்லோரும் ஒன்று சேருகின்ற வரை யில் நான் தேசத் துரோகியாக இருந்து தேசா பிமானப் புரட்டையும், சுயராஜ்யப் புரட்டையும் வெளியாக்காமல் இருக்க முடியாது.

**– பெரியார், 21.10.1934, ‘பகுத்தறிவு’**

# கொளப்பலூரில் தமிழர் திருவிழா



ஈரோடு வடக்கு மாவட்டம் கோபி கொளப்பலூர் கிளை கழகத்தின் சார்பாக கடந்த 30.01.2017 அன்று தமிழர் திருவிழா நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கொளப்பலூர் கிளை கழகத் தலைவர் சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். அவரின் தலைமை உரையின் போது, சாலைகளில் தேங்காய் பூசணிக்காய் உடைப்பதை நிறுத்த வேண்டும் என்றும் அதனை உடைப்பதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் விளக்கி உரையாற்றினார். தொடர்ந்து திருச்சி விரட்டு கலை பண்பாட்டு மையத்தின் சார்பாக கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது கலைக்குழு சார்பாக மயிலாட்டம், ஒயிலாட்டம், பறையாட்டம் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. ‘ஒன்னுமில்லை’ எனும் பகுத்தறிவு நாடகம் நடைபெற்றது. மக்கள் இன்றைய காலகட்டத்தில் ஒன்னுமில்லா விசயங்களுக்காக எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்று நாடகத்தின் மூலம் விளக்கினார்கள். கலை நிகழ்ச்சியில் மாநில வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் உரை நிகழ்த்தினார். அவர் உரையாற்றும் போது, உயிரின் தோற்றம் குறித்தும் அறிவியல் வளர்ச்சி குறித்தும் விளக்கமாக உரையாற்றினார். தொடர்ந்து இரவு 10.30 மணி வரை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. நிகழ்வின் இறுதியில் தாமோதரன் நன்றி கூறினார்.




கொளப்பலூர் பகுதியை சுற்றி யுள்ள பகுதிகளிலும் தோழர்கள் நிகழ்ச்சி யினை பற்றி விளம்பரம் செய்து இருந்ததால் பொது மக்கள் கூட்டம் பெருந்திரளாக கூடியிருந்தார்கள். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கொளப்பலூர் கிளை கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

# விடுதலை இராசேந்திரன் கேள்வி

# ‘இந்திய தேச பக்தி’ பேசும் பா.ஜ.க. பரிவாரங்களே! ‘இந்தியா’ என்ற சொல்லை ஏற்க மறுப்பது ஏன்?

*தமிழ்நாடு மாணவர் கழக சார்பில் “யார் தேச விரோதிகள்” என்ற தலைப்பில் கருத்தரங்கம் சென்னையில் திராவிடர் விடுதலைக் கழக தலைமை அலுவலகத்தில் 5.2.2017 அன்று மாலை நடைபெற்றது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்:*




மாணவர்கள், இளைஞர்கள் நடத்திய வரலாறு காணாத எழுச்சிப் போராட்டத்தில் தேச விரோதிகள் ஊடுருவி விட்டதாக பா.ஜ.க.வினரும், காவல் துறையும் கூறுகிறார்கள். தமிழக முதல்வர் பன்னீர் செல்வமும், சட்டமன்றத்தில் இதே கருத்தை மத்திய உளவுத் துறை தயாரித்துத் தந்திருந்த அறிக்கையை படித்தார்.

‘தேச விரோதிகள்’ குறித்து நாம் பேசுவதற்கு முன்பு ‘தேச பக்தர்கள்’ குறித்து விவாதிக்க வேண்டும். உண்மையில் தேசபக்தி என்பதற்கான விளக்கம்தான் என்ன? இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்றுபட்டிருந்தபோது, தேசபக்தியின் அர்த்தம் வேறு; பாகிஸ்தான் பிரிந்த பிறகு அர்த்தம் வேறு. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட ஒரு உபகண்டம்தான் இந்தியா. பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில்தான் இப்போது கூறப்படும் ‘இந்தியா’ என்ற நாடே உருவானது.1773இல் தான் முதன்முதலாக பிரிட்டிஷ் ஆட்சி வருகைக்குப் பிறகு மத்திய அரசு என்ற ஒன்றே உருவாகிறது.

தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு அதன் வளர்ச்சியில் ஆர்வம் காட்டுவது தேச விரோதமா? தேசபக்தி - தேசம் என்ற சொல்லாடல்களையே கேள்விக் குள்ளாக்கியவர் பெரியார். “சோவியத் ரஷ்யா இந்தியாவுக்கு படை எடுத்து வந்தால் அதை நான் ஆதரிப்பேன்” என்றுகூட பெரியார் எழுதினார். “அப்படி ஒரு ஆட்சியின்கீழ் வாழ்ந்தால் ‘பிராமணன் - சூத்திரன்’, ‘ஏழை-பணக்காரன்’ பாகுபாடு இல்லாமல் போய்விடும்” என்றார்.1932இல் பெரியார் சோவியத் ரஷ்யாவுக்கு சென்றபோது வாய்ப்பிருந்தால் அந்த நாட்டிலேய தங்கிவிடலாம் என்ற எண்ணமும் அவருக்கு இருந்தது. ஒரு பொதுவுடைமைக்காரர், முதலில் தேசியவாதியா? சர்வதேசியவாதியா? இதில் எதற்கு முன்னுரிமை தர வேண்டும் என்று மறைந்த பொதுவுடைமை தலைவர் பாலதண்டாயுதத்திடம் பெரியார் மேடையில் விவாதித்திருக்கிறார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக இருந்தவர் பேராசிரியர் சுப்ரமணியம். அவர்தான் அப்பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர். பதவி ஓய்வுக்குப் பிறகு ஆந்திராவில் என்.டி.ராமாராவ் தொடங்கிய திராவிட பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தராக அழைக்கப்பட்டார். அப்போது வாஜ்பாய் ஆட்சியில் மத்திய மனிதவளத் துறை அமைச்சராக இருந்த முரளி மனோகர் ஜோஷி என்ற வைதீகப் பார்ப்பனரை சந்திக்கச் சென்றார். பல்கலைக் கழகத்தின் பெயர் ‘திராவிட’ என்று இருப்பதை நீக்கிட வேண்டும் என்றார் ஜோஷி; அதற்கு துணைவேந்தர் அளித்த பதில், ‘ஜனகணமன’ தேசிய கீதத்தில் வரும் ‘திராவிட’ என்ற சொல்லை நீங்கள் நீக்கினால், நாங்களும் நீக்கிவிடத் தயார் என்றார். தேச விரோதிகள் யார் என்று, இங்கே தரப்பட்டிருக்கிற தலைப்பு குறித்து இளைஞர்களாகிய உங்களிடம் சில வரலாற்றுச் செய்திகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தேசபக்திக்கு சொந்தம் கொண்டாடுகிற பாரதிய ஜனதா, அதற்கு முன் ஜனசங்கமாக இருந்தது. அதற்கு முன் ‘இந்து மகாசபை’யாக இருந்தார்கள். இவர்கள் எல்லோருக்கும் ‘கருத்தியல்’ வழங்கும் மூல அமைப்பு, ‘இராஷ்டிரிய சுயம் சேவக் சங்’ எனும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புதான். அந்த அமைப்பு தேச விரோத அமைப்பு என்று மூன்று முறை தடை செய்யப்பட்ட அமைப்பு. காந்தி கொலை செய்யப்பட்டபோது ஒரு முறை; 1976இல் இந்திரா காந்தி அவசர நிலையைக் கொண்டு வந்தபோது ஒரு முறை; பிறகு பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது ஒரு முறை; இவர்களுக்கு தேசபக்தி பற்றி பேச என்ன தகுதி இருக்கிறது?

தேசியக் கொடியை மாணவர்கள் அவமதித்ததாகக் கூறுகிறார்கள். இப்போதிருக்கும் தேசியக் கொடியை வடிவமைத்தபோது, காவிக் கொடிதான், நமது மூதாதையர் கொடி. இந்த மூவர்ணக் கொடி வேண்டாம் என்று கூறியதுதான் ஆர்.எஸ்.எஸ். அந்த அமைப்பின் தலைவராக இருந்தவர் கோல்வாக்கர் என்ற மராட்டியப் பார்ப்பனர். அவர்தான் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கான கொள்கையை எழுத்து வடிவமாக்கித் தந்தவர். கிறிஸ்தவர்களுக்கு ‘பைபிள்’போல இஸ்லாமியர்களுக்கு குரான் போல ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கான ‘பைபிள்’ இந்த நூல்தான். அதன் பெயர் ‘பஞ்ச் ஆப் தாட்ஸ்’ (Bunch of Thoughts). தமிழில் ‘சிந்தனைக் கொத்து’ என்று வெளியிட்டார்கள். இப்போது பதிப்புகள் வெளி வருவதில்லை. இவர்களின் உண்மையான கொள்கை அடையாளங்கள் வெகு மக்களுக்கு தெரிந்து விடக்கூடாது என்று ‘வேதத்தைப்போல்’ தங்களுக்கான மறை பொருளாகவே இதையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எச். ராஜாக்கள், குருமூர்த்திகள், சுப்பிரமணியசாமிகள், தங்களை தேச பக்தர்களாக முத்திரை குத்திக் கொண்டு, ‘இந்தியா’வை எதிர்த்து பேசுவதே தேச விரோதம் என்று கூப்பாடு போடுகிறார்கள்.

அவர்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும். ஆர்.எஸ்.எஸ். துணை அமைப்புகளுக்கோ, அதன் அரசியல் கட்சிகளுக்கோ, ‘இந்தியா’ என்ற பெயரை ஏன் பயன்படுத்துவதில்லை? இதற்கு பதில் சொல்ல வேண்டும். ‘இந்திய ஜனதா கட்சி’ என்று பெயர் சூட்டாமல், ‘பாரதிய ஜனதா கட்சி’ என்று பெயர் சூட்டியிருப்பது ஏன்? அவர்களின் தொழிற்சங்க அமைப்பு உள்ளிட்ட அத்தனை அமைப்புகளுக்கும் ‘பாரதிய’ என்ற சொல்லை மட்டும் பயன்படுத்துவது ஏன்? இந்தியா என்ற சொல்லையே முழுமையாகத் தவிர்ப்பது ஏன்? இதற்கு பதில் சொல்வார்களா? இதற்கான காரணத்தை இந்த ‘தேச பக்த திலகங்கள்’ மூடி மறைத்து வைத்திருப்பதன் நோக்கத்தை நாங்கள் அம்பலப்படுத்துகிறோம். ஆர்.எஸ்.எஸ். கொள்கை நூலான ‘பஞ்ச் ஆப் தாட்ஸ்’ நூலில் கோல்வாக்கர் இவ்வாறு எழுதியிருக்கிறார்.

> *“பாரதியம் என்பது நம்முடைய பழமையான பெயர். நமக்கு நினைவு தெரியாத காலம் முதல், இந்தப் பெயர் இருக்கிறது. புராணத்திலும் வேதத்திலும் பாரத் – பாரதியம் என்றே கூறப்பட்டிருக்கிறது. ‘பாரத்’ என்பதும், ‘இந்து’ என்பதும் ஒன்றுதான்.....”*

> *“இன்று பாரதியம் பாரத் என்ற சொற்கள் கூட தவறான பொருளில் பயன்படுத்தப் படுகின்றன. இந்தியா – இந்தியன் என்ற சொல்லுக்கு மாற்றாகப் பயன்படுத்து கிறார்கள். ‘இந்தியன்’ என்ற சொல் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம், கிறிஸ்தவர், பார்சி போன்ற பல்வேறு சமூகத்தவரையும் சேர்த்துத் தான் குறிக்கிறது. நம்முடைய சமூகமான ‘இந்து’வை மட்டும் குறிப்பதில்லை. நம்முடைய சமூகத்தை மட்டும் குறிக்கும் ‘பாரதிய’ என்ற சொல்லை மற்ற சமூகத்தினரையும் இணைத்துக் கொள்ளும் சொல்லாகக் குறிப்பிடு கிறார்கள்” என்று எழுதுகிறார், கோல்வாக்கர். இப்படி ‘இந்தியா’ என்ற சொல்லையே ஏற்க மறுப்பவர்கள்தான் இந்தியாவின் ‘ஏஜெண்டு’களாகியிருக் கிறார்கள்.*

கேரளாவில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நடத்திய ஒரு கல்வி நிறுவனம். தேசிய கீதமான ‘ஜனகனமண’ பாடலை பள்ளிகளில் பாட மாட்டோம் என மறுத்தது. ‘வந்தே மாதரம்’ பாடலையே பாடுவோம் என்று அடம் பிடித்தார்கள். நீதிமன்றம் வரை சென்று வாதாடினார்கள். ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்களில் ‘ஜனகணமன’ பாடப்படுவது இல்லை. ‘ஜனகணமன’ பாடலுக்கு பதிலாக ‘வந்தே மாதரம்’ பாடுவதுதான் தேசபக்தி என்கிறார்கள். ‘ஜெய்ஹிந்த்’ என்கிறார்கள். ‘இந்து மதத்துக்கு ஜே’ போடுவதுதான் ‘ஜெய்ஹிந்த்’. அவர்கள் பார்வையில் இதுதான் தேசபக்தி முழக்கம். பல்வேறு மதத்தினரும் மத நம்பிக்கையற்றோரும் வாழும் நாட்டில் ‘ஜெய்ஹிந்த்’ என்று மட்டுமே கூறுவது ‘தேசபக்தியா? தேச விரோதமா?’

**‘வந்தே மாதரம்’ தேச பக்தி பாடலா?**

‘வந்தே மாதரம்’ என்பதன் வரலாறு என்ன? பிரிட்டிஷ் ஆட்சியில் வங்காளம் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது, அதை எதிர்த்து நடந்த போராட்டம், வங்காளிகளின் இந்து தேசியத்துக்கான போராட்டமாக கட்டமைக்கப்பட்டது. அப்போது பக்கிம் சந்தர் சட்டர்ஜி என்ற வங்காளப் பார்ப்பனர், ‘ஆனந்த மடம்’ என்ற நாவலை 1880இல் எழுதினார். நாவலின் மய்யக் கருத்து, முஸ்லிம் மன்னர்களின் ஆட்சியை ஆயுதப் போர் நடத்தி அகற்றிவிட்டு, இந்துக்கள், பிரிட்டிஷ் ஆட்சியோடு இணைந்து கூட்டு ஆட்சியை அமைக்க வேண்டும் என்பதே. வைணவ இந்து இளைஞர்கள் ஆயுதம் தாங்கிப் போராட வேண்டும் என்பதே கதையின் கரு. வைணவர்களின் தலைவராக சுவாமி சத்யானந்தா என்ற ஒரு துறவியும், அவரது சீடராக குருபவானந்தா என்ற வீரமிக்க இளைஞரும் இந்தக் கதையின் முக்கிய நாயகர்கள். பவானந்தா இந்து இளைஞர்களை ஒன்று திரட்டி, முஸ்லிம்களுக்கு எதிராகப் போராட ஆயுதப் பயிற்சி அளிக்கிறான். அப்போது இளைஞர்களிடம் பாடும் பாடல் தான் ‘வந்தே மாதரம்’. அந்த வந்தே மாதரம் பாடல் என்ன கூறுகிறது?

“நாம் முஸ்லிம்களை ஒழிக்காவிட்டால், நமது தர்மத்துக்கு எதிர்காலமே இல்லை. ஏழு கோடி இந்துக்களாகிய நாம் வாளேந்தி களத்தில் குதித்தால், அது ஒன்றே போதும் நமது பெருமையை மீட்க” - இதுவே அப்பாடலின் பொருள். ‘ஆனந்த மடத்துக்குள்’, ‘விஷ்ணு’வின் மடியில் பலவீனமாக ‘இந்திய மாதா’ படுத்திருக்கும் படத்தைப் பார்த்து, ‘வந்தே மாதரம்’ என்று முழங்கி, முஸ்லீம்களுக்கு எதிராக வாளேந்திப் போரிடுகிறார்கள். முஸ்லிம் பெண்கள் பலரை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குகிறார்கள். பிறகு காளிதேவி முன் வெற்றிக் கூத்தாடுகிறார்கள். அப்போது இன்னும் இந்து ராஜ்யம் வரவில்லையே; ஆங்கிலேயர்கள் தானே நம்மை ஆளுகிறார்கள்? என்று இளைஞர்கள் சத்யானந்தாவிடம் கேட்க, அவர் கூறுகிறார், “இப்போது நமக்கு எதிரிகள் யாருமில்லை. ஆங்கிலேயர்கள் நம்முடைய நண்பர்கள். அவர்கள் தங்கள் அதிகாரங்கள் அனைத்தையும் ‘விஷ்ணு’வுக்கே காணிக்கையாக்கியிருக்கிறார்கள்” என்கிறார். கதை அத்துடன் முடிகிறது.

இஸ்லாமியர்களுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடும் மதவெறிப் பாடல்தான் - சங்பரிவாரங்களுக்கு தேசபக்திப் பாடல். இந்தப் பாடலை தேசிய கீதமாக்க முயற்சிகள் நடந்தன. முஸ்லிம் லீக் எதிர்ப்பு தெரிவித்தது. காந்தியும் இதை ஏற்கவில்லை. இப்போதும் ‘வந்தே மாதரத்தை’ பாடிக் கொண்டு அதுதான் தேச பக்தி என்று கூறிக் கொண்டிருப்பவர்கள்தான் தேசபக்தி பற்றி பேசுகிறார்கள்.

இந்தியர்கள், இந்திய உணர்வுக்கு எதிராகப் பேசுவது ‘தேச விரோதம்’ என்று துள்ளிக் குதிக்கும் சங்பரிவார், பா.ஜக.வை நோக்கி, மற்றொரு கேள்வியை முன் வைக்கிறோம். மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டதே தவறு என்கிறது ஆர்.எஸ்.எஸ். கொள்கை. கோல்வாக்கர் இவ்வாறு எழுதுகிறார்:

> *“வாழும் பிரதேச எல்லையின் அடிப்படையில் தேசியத்தை ஏற்றுக் கொண்டதுதான், நமது நாட்டைப் பீடித்துள்ள பல தீமைகளுக்கும் துன்ப துயரங்களுக்கும் காரணம்” என்று எழுதுகிறார்.*

அது மட்டுமல்ல, ‘இந்தியா’ என்று இந்த நாட்டுக்குப் பெயர் சூட்டியதையும், ‘இந்தியர்கள்’ என்று அழைப்பதையும் துரோகம் என்கிறார், கோல்வாக்கர்.

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நந்தினி படுகொலைக்கு நீதி கேட்டு கழகம் நடத்திய ஆர்ப்பாட்டங்கள்

*தமிழகத்தின் பல ஊர்களில் நந்தினி படுகொலைக்கு நீதி கேட்டு கழகம் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறது.*

**அரியலூர் :** கூட்டு பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்ட தலித் சிறுமி நந்தினி படுகொலையை கண்டித்து அரியலூர் மாவட்டம் செந்துரை அருகில் சிறுகடம்பூரில் 04-01-2017 அன்று திராவிடர்



விடுதலைக்கழகம் சார்பில் அரியலூர் பேருந்து நிலையம் அருகில் அண்ணா சிலை பின்புறம் காலை 10.00மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

ஆர்ப்பாட்டத்தை விழுப்புரம் அய்யனார், கழகத் தலைமை செயற் குழு உறுப்பினர் தொகுத்து வழங்கினார் . முன்னதாக புதுச்சேரி சிந்தனையாளர் இயக்க ஒருங்கிணைப்பாளர் தீனா, நாமக்கல் மாவட்ட திவிக செயலாளர் வைரவேல், புதுச்சேரி திவிக அமைப்பாளர் இளையரசன், சமூக ஆர்வலர் தமிழரசன், தமிழ் வழிக் கல்வி இயக்கம் சின்னப்பத் தமிழர், மக்கள் கண்காணிப்பகம் இராமு, பெரம்பலூர் மாவட்ட திவிக.செயலாளர் துரை.தாமோதரன் ஆகியோர் கண்டன உரை ஆற்றினர்.

பெரியார் திராவிடர் கழகம் - சுயமரியாதை சமதர்ம இயக்கம் காசு. நாகராசு, திருச்சி பெரியார் சரவணன், மாநில கொள்கை பரப்பு செயலாளர், தமிழக வாழ்வுரிமை கட்சி. துரை அருண் வழக்கறிஞர், திவிக ,சென்னை ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மாவட்ட செயலாளர், விடுதலை சிறுத்தைகள் கட்சி, அரிய லூர் மாவட்டம் செல்வ நம்பி உரையாற்ற, ஆர்ப்பாட்டத்தை ஒருங்கிணைத்த இராவண கோபால் நன்றி தெரிவிக்க சுமார் 2.00 மணியளவில் ஆர்ப்பாட்டம் நிறைவு பெற்றது. மேலும் சென்னை மாவட்ட திவிக பொறுப்பாளர்கள் இரா.செந்தில், ஜான் மண்டேலா மற்றும் கல்லூரி மாணவர்கள் வினோத் குழுவினரும் விடுதலை சிறுத்தைகள், தமிழக வாழ்வுரிமை கட்சியை சேர்ந்த தொண்டர்களும் ஆர்ப்பாட்டத்தில் பங்கு பெற்றனர். ஆர்ப்பாட்டம் நடத்திட உறுதுணையாக இருந்த அரியலூர் மு.சே.கலைச்செல்வனுக்கு நன்றிகளை உரித்தாக்குகிறோம்

**மதுரையில் :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 31.1.2017 அன்று காலை 11 மணியளவில் மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகில்



ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மதுரை மாவட்ட கழகச் செயலாளர் மா.பா.மணிகண்டன் தலைமை தாங்கினார். ஆதிதமிழர் பேரவை துனை பொதுச் செயலாளர் கார்த்திக், மாவட்ட செயலாளர் ஆதவன் , ஆதித் தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் சிதம்பரம், திவிக மாநகர் பொறுப்பாளர். காமாட்சி பாண்டி, சத்திய மூர்த்தி, சரவணன், சங்கரன் கோவில் ராமசாமி, அருள். பாலா உள்ளிட்ட 53 பேர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது செயல்படாத தீண்டாமை ஒழிப்புப் பிரிவு காவல் அலுவலகம் நோக்கி முற்றுகையிட செல்ல முயன்ற தோழர்கள் 20 பேரை காவல்துறை கைது செய்தது. தோழர்கள் மாலை விடுவிக்கப்பட்டனர்.

## படிப்பகத்தில் சுயமரியாதை, ஜாதி மறுப்புத் திருமணம்



20.1.2017 காலை 10 மணிக்கு மேட்டூர் தந்தை பெரியார் படிப்பகத்தில் ஈரோடு மாவட்டம் சித்தோடு வட்டத்தைச் சேர்ந்த கழக ஆதரவாளர் தங்கவேலு-பங்கஜவள்ளி ஆகியோரின் மகன் த.அருண் பிரச்சன்னாவுக்கும், கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம் சாலியந்தோப்பு கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம்-உஷாராணி ஆகியோரது மகள் ஆ.சுபமங்களத்துக்கும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சுயமரியாதைத் திருமணம் நடத்தி வைத்தார்.

திருமண விழாவில் கழகத் தோழர்களும், மணமக்களின் பெற்றோர்களும் உறவினர்களும் கலந்து கொண்டனர். மணமக்கள் சார்பாக 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதியாக ரூ.3000/- கழகத் தலைவரிடம் வழங்கினர்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

"நமது நாட்டை அதன் புராதனப் பெயரான இந்துஸ்தான் என்று பெயரிட்டு அழைக்கக் கூடாது என்றனர். ஏனெனில் அது முஸ்லிம்களின் மத உணர்வைப் பாதித்துவிடுமாம். பிரிட்டிஷ்காரர்கள் சூட்டிய 'இந்தியா' என்ற பெயரை ஏற்றுக் கொண்டனர். இந்தப் பெயரை ஏற்றுக் கொண்டு, புதிய தேசத்தை இந்திய தேசம் என்று அழைத்தனர். இந்துக்களை எப்படி இந்தியர்கள் என்று அழைக்க முடியும்? என்று கேட்கிறார் கோல்வாக்கர்.

இதுதான் தேச பக்தியின் குரலா? எச்.ராஜாக்கள், குருமூர்த்திகள் பதில் சொல்லத் தயாரா? ஆர்.எஸ்.எஸ்.சுக்கு கருத்தியலை வழங்கும் கோல்வாக்கர் நூலை நாங்கள் நிராகரித்து விட்டோம் என்று அறிவிப்பார்களா? பதில் சொல்லட்டும்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, ஏதோ தேச பக்தியை நாட்டில் வளர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்டது போல் பேசிக் கொண்டிருப்பவர்களின் முகத் திரையை நாம் கிழித்தாக வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவும் இஸ்லாமியர்களை பகைவர்களாகவும் எப்படி 'ஆனந்த மடம்' நாவல் சித்தரித்ததோ, அதுதான் சுதந்திரப் போராட்ட காலங்களிலும் ஆர்.எஸ்.எஸ். எடுத்த நிலைப்பாடு, இதற்கு ஏராளமான ஆதாரங்களை குவிக்க முடியும். **(தொடரும்)**

## திருப்பூரில் பொங்கல், தைப்புத்தாண்டு விழா !




திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் திருப்பூர் மாஸ்கோ நகர் பெரியார் திடலில் 22.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மாலை வரை 8 ஆம் ஆண்டு திராவிடர் பெருவிழாவாக பொங்கல், தைப்புத்தாண்டு விழா கொண்டாடப்பட்டது.

22.01.2017 அன்று காலை 8 மணிக்கு பொதுமக்களுக்கு பொங்கல் வழங்கப்பட்டு நிகழ்ச்சி ஆரம்பமானது. தொடர்ந்து சிறுவர் சிறுமியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், உரி அடித்தல், குழு விளையாட்டுப் போட்டிகள் ஆகியன நடைபெற்றன. மாலை 6 மணிக்கு நிமிர்வு கலைக் குழுவினரின் ஜாதி ஒழிப்புப் பறையிசை நிகழ்ச்சி மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது. பின் காலை நடந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசுகளாக பெரியாரிய புத்தகங்கள், வெற்றிக்கோப்பை, நாள்காட்டி ஆகியன வழங்கப்பட்டன. இவ்விழா அப்பகுதி பொது மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. விழாவினை அகிலன், மாதவன், நாகராசு, கணபதி, பிரவீன்குமார், நீதிராசன், கருணாநிதி, தனபால், ராஜசிங்கம் உள்ளிட்ட தோழர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். பரிசளிப்பு விழாவில் கழகப் பொருளாளர் துரைசாமி, அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு, பாண்டியநாதன், முத்துலட்சுமி, சங்கீதா, முத்து, பிரேம் குமார், தனகோபால், பல்லடம் சண்முகம், மணி ஆகியோர் கலந்து கொண்டனர். உணவு ஏற்பாட்டினை மாதவன் குடும்பத்தினர், அகிலன் குடும்பத்தினர், கோமதி குடும்பத்தினர் ஆகியோர் செய்திருந்தனர். தோழர் தனகோபால் ஒளி,ஒலி பதிவினை செய்தார். இரவு 8 மணிக்கு நிகழ்ச்சி நிறைவடைந்தது.

## பள்ளிப்பாளையத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்




மாணவர்கள், மீனவர்கள் மற்றும் தலித்துகள் மீது நடத்தப்பட்ட காவல்துறையின் வன்முறைகளுக்கு நீதி கேட்டு, நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. 30.1.2017 திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் மு. முத்துப்பாண்டி (மாவட்ட பொருளாளர்) தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மா. வைரவேல் (மாவட்ட அமைப்பாளர்), மு. சரவணன் (மாவட்ட செயலாளர்), இரா. ஃபிடல் சேகுவேரா (இராசிபுரம் நகர அமைப்பாளர்) கண்டன உரையாற்றினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 10th Feburary 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN